செ.வெ.எண்.312/2009,                                                                  நாள்:19-09-2009

# சென்னை அருகே சோழிங்கநல்லூர், பெரும்பாக்கம் கிராமங்களில் நிதிநகரம் அமைப்பதற்கான 180 ஏக்கர் நிலத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை அருகே சோழிங்கநல்லூர், பெரும்பாக்கம் கிராமங்களில் நிதிநகரம் அமைப்பதற்கான 180 ஏக்கர் நிலத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். 2009-2010ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டக் கூட்டத் தொடரின் போது சென்னை அருகே நிதிநகரம் அமைக்கப்படும் என மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார். அந்த திட்டத்தின் வளர்ச்சியை ஒருங்கிணைப்பதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தை (டிட்கோ) நியமனம் செய்துள்ளது. டிட்கோ சார்பில் நிதிநகரம் தொடர்பான ஒரு பரந்த கோட்பாடு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்காக பல்வேறு துறைகளில் உள்ள அலுவலர்களோடு டிட்கோ தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தியது. இந்த நிதி நகரத்திற்கான வரைபடம் தயாரிப்பதற்காக நிதி, வங்கி, ஈட்டுறுதி, தகவல் தொழிற்நுட்பம், நிதியகப்பணி ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்களைக் கொண்ட அடிப்படை அறிவுரைகுழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதிநகரம் அமைப்பதற்காக சோழிங்நல்லூர், பெரும்பாக்கம் ஆகிய கிராமங்களில் சுமார் 180 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த இடத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அங்கிருந்த அதிகாரிகளிடம் நிலத்தின் அமைப்பு குறித்த தகவல்கள் கேட்டறிந்தார். ஆய்வுப்பின், செய்தியாளர்களிடம் பேசியதாவது,

ஏற்கனவே, சட்டமன்ற கூட்டத் தொடரில் தொழில்துறை மானியக் கோரிக்கையின் போது சென்னை நகரில் நிதிநகரம் உருவாக்கப்பட்டு தனியார் பங்கேற்புடன் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக டிட்கோ நிறுவனம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநகரம் தொடர்பான விரிவான அறிக்கையினை டிட்கோ தயாரித்துள்ளது. நிதிநகரத்தின் கட்டுமான வரைபடத்தை உருவாக்குவதற்காக வல்லுநர்களை கொண்ட அறிஞர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிதிநகரத்தில் வங்கி, காப்பீடு, மறுகாப்பீடு, இடர்மேலாண்மை, காப்பீடு கணக்குப்பணிகள், சொத்து மேலாண்மை பணிகள் போன்ற அடிப்படை நிதி செயல்பாடுகள் இடம் பெற்றிருக்கும். மேலும், பயிற்சி மையங்கள், அலுவலர் பயிற்சி கல்லூரிகள் போன்றவையும் இடம்பெறும். உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இந்த நிதிநகரம் அமைப்பதற்காக 180 ஏக்கர் நிலத்தை பார்வையிட்டுள்ளோம். சிங்கப்பூரில் உள்ள நிதிநகரத்தின் செயல்பாடுகளை முன்மாதிரியாக கொண்டு அதன் பயன்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய உள்ளோம் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது தொழில் துறை முதன்மைச் செயலர் திரு.எம்.எப்.பருக்கீ, டிட்கோ தலைமை மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி.அனிதா பிரவீன் இ.ஆ.ப., துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலர் திரு.தீனப்பந்து இ.ஆ.ப., துணைச்செயலர் திரு.ரகுபதி இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.நம்பிராசன், சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.இராஜா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உடன் இருந்தார்கள்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்